*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய* www.iaraindia.com
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# காந்தியடிகளும் ஜே.சி.குமரப்பாவும்

**முனைவர் மா. பத்மபிரியா**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*இந்தியாவின் வடபகுதியில் உள்ள போர்பந்தரில் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் பிறந்தார் மகாத்மா காந்தி. இவரின் இயற்பெயர் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி ஆகும். இந்தியாவின் தென்பகுதியில் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் 1892 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் நாள் ஜே.சி.குமரப்பா பிறந்தார். இவரின் இயற்பெயர் சி.ஜோசப் செல்லதுரை கொர்னலியஸ். பிறப்பிடம் வேறுபட்டாலும் நாட்டுத்தொண்டுள்ளத்தால் ஒன்றுபட்டவர்கள் இவ்விருவரும்.*

ஜே.சி.குமரப்பா, இலண்டனில் தணிக்கையாளராகத் தகுதி பெற்றவர். அமெரிக்காவின் புகழ்பெற்ற கொலம்பிய பல்கலைக்கழகத்தில் “இந்தியாவின் பொது நிதி” குறித்து ஆய்வு செய்து முடிவில் ‘இந்தியாவின் வறுமையைத் தூண்டும் முக்கிய காரணி அரசின் கொள்கையே’ என்று அறிவித்தவர். 1929ஆம் ஆண்டில் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் பணிபுரிய முன்வந்தவர். காந்தியடிகளின் ‘யங்இந்தியா’ வார இதழின் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டவர். அப்பொழுது ஆங்கிலஅரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக கடும் வாதங்களை முன்வைத்தவர். அவரின் புரட்சிகரமான பொருளாதார சிந்தனைகளுக்கு ஆங்கில அரசு தண்டனை அளித்தும் கலங்காதவர். ஆங்கில அடக்கு முறையால் மூன்று முறை சிறை சென்றுள்ளார். கிராமக் கைத்தொழில்கள் வளர கிராம விளைபொருட்கள் கிராமங்களுக்கு முழுமையாக பயன்பட வேண்டும் என்றவர். தமது எண்ணத்தின் மேன்மையால் காந்தியச் சிந்தனை களைக் கைகொண்டு கொள்கை வாழ்வு வாழ்ந்தார். ஆதலால், காந்தியடிகள் போதித்த கொள்கைகளின் சாரம் ஜே.சி.குமரப்பாவின் வாழ் நாள் கடமையாகியுள்ளது என்றால் மிகையாகா.

காந்தியடிகளும் ஜே.சி.குமரப்பாவும் பாரத தேசத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டு தேசமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வாழ்ந்தவர்கள். இருவரின் சிந்தனைத் தளமும் ஒன்றுபட்டன என்பதனை இக்கட்டுரை ஆய்கின்றது.

**அறப்பணியில்**

காந்தியடிகளின் கொள்கைகளில் கவரப்பட்டதுடன் அதனை தமது வாழ்நாள் கடமையாக ஏற்று வாழ்ந்த பிரமச்சாரி ஜே.சி.குமரப்பா. அவர் வாழ்நாளில் அநேக நிகழ்வுகளை அதற்குச் சான்றாக கூறலாம். குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் உள்ள தே.கல்லுப்பட்டியில் இருக்கும் காந்தி நிகேதன் ஆசிரமப் பணிகளில்

கவரப்பட்ட ஜே.சி.குமரப்பா, 1954 முதல் தனது ஓய்வுக் காலத்தை அங்கேயே செலவிட்டார். நிர்வாக மேலாண்மை மற்றும் பொருளியல் ஆகிய துறைகளில் நாட்டம் கொண்டவர்.ஆதலால் காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகமான குஜராத் வித்யா பீடத்தில் பொருளாதாரப் பேராசிரியராக பணிபுரிந்தார்.காந்தியப் பொருளாதாரத்தை தமது உயிர் மூச்சாகக் கொண்டவர். **“கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பு என்றவர் காந்தியடிகள்.அந்த கிராமங்களுக்கான பொருளாதாரக் கொள்கையை தந்தவர் ஜே.சி.குமரப்பா.”**

உணவுப் பஞ்சம், பட்டினிச்சாவு, விவசாய நெருக்கடி குறித்து தீர ஆலோசித்து அரசின் கொள்கைகளைக் கண்டித்தார். மக்களின் வாழ்வு முன்னேறும் அறப்பணியை தமது வாழ்நாள் பணியாக மாற்றினார். காந்தியடிகள் போன்று தமது எளிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். ஏழைகளின் குடிசைக்கு மின்சாரம் சென்ற பின்பே தமது குடிலுக்கு வரவேண்டும் என்றார்.

அன்றைய கால கட்டத்தில் காமராசர் முதல்வராக இருந்த போது அவரை சந்தித்த ஜே.சி.குமரப்பா முதல்வரிடம் கூட நாட்டு மக்களின் நலன் கருதியே உரையாடியுள்ளார். “கிராமப் புறங்களில் மின்சார நீர் இறைப்பான்களையும் கிணற்றுப் பாசனத்தையும் விரிவுபடுத்துவதை மிகக்கவனமாகச் செய்ய வேண்டும். அதற்கு மாற்றாக ஏரிகளையும் குளங்களையும் அரசு விரிவுபடுத்த வேண்டும் ”என்றார்.

**இயற்கை ஆர்வலராக**

ஒவ்வொரு தாவர வளர்ச்சிக்கும் ஊட்டச்சத்து மிக்க உரம் அவசியம். அத்தகைய உரம் மண்ணின் வளத்தை உயர்த்த வேண்டுமே தவிர வளத்தை சிதைத்தல் கூடாது. எல்லாத் தாவரங்களும் மண்ணிலிருந்து தமது வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்தினைப் பெறுகின்றன. இது தொடர்ந்து மேற்கொள்ளும் போது மண்ணிலுள்ள கனிமங்கள் குறைகின்றன. எனவே தான் விவசாயிகள் மண்ணின் வளத்தினைப் பெருக்குவதற்கு இயற்கையான தழையுரங்களை இடுகின்றனர். இத்தகைய தழையுரங்கள் இன்று மண்ணில் பற்றாக்குறையாகவே இருக்கின்றது காரணம் காடுகள் அழிப்பு நகர்மயமாக்கல். பழந்தமிழகத்தில் இயற்கை வளம் கொட்டிக்கிடந்ததால் தழையுரங்கள் எளிதாக கிடைத்துள்ளது.

கால்நடையின் எச்சமும், காய்ந்த சருகின் தழையும் வேளாண்மைக்கு உரமாக அமைந்தால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாது மண்ணும் வளம்பெறும். “வேளாண்மையில் பசுந்தழை உரங்கள், தொழுவங்கள் போன்றவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. கால்நடைச் சாணத்தின் மூலம் உயிரினவாயு தயாரிப்பது பற்றியும் அதனுடைய முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்து நிலம் மாசுபாடு தவிர்க்கப்படுகிறது.”[1] இவ்வாறு இயற்கை உரங்கள் பற்றிய விழிப்புணர்வு இன்றைய உழவர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. மேற்கண்ட சிந்தனைகளில் அன்றே மூழ்கிப்போனவர் ஜே.சி.குமரப்பா, **“இயற்கை உரங்களுக்குப் பதில் இராசாயன உரங்கள் பயன்படுத்துவதைக் கண்டித்தார்**”.இயந்திர உழவு மாட்டை வெளியேற்றுவதுடன் பசுஞ்சாணஉரங்களையும் வெளியேற்றுகிறது என்று வருந்தியவர்.

**பொருளாதாரச் சிந்தனைத் தளத்தில்**

காந்தியப் பொருளியல் மேதையாக, காந்தியப் பொருளாதாரத் தத்துவத்தினை நாடெங்கும் பரப்பும் பணியை தமது வாழ்நாள் கடமையாக கொண்டவர் ஜே.சி.குமரப்பர். இவர், 1934 ஆம் ஆண்டு காந்தியின் தலைமையில் தொடங்கப்பட்ட அகிலஇந்திய கைத்தொழில் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றியவர். அழிந்து வரும் கிராமக் கைத்தொழில்களை மீட்டெடுப்பதற்காக காந்தியின் சேவா கிராம ஆசிரமத்தின் அருகே ‘மகன்வாடி’ என்ற பெயரில் கிராமத் தொழில்களுக்கான தேசிய மையத்தை அமைத்தார்.

காந்தியடிகள் பரவல் முறைப் பொருளாதாரத்தை ஆதரித்தார்.அவரின் பொருளாதாரக் கொள்கையில் பயணித்த குமரப்பா எந்தவொரு பிரதிபலனும்

எதிர்பாராமல் தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாது மற்றவர்களுக்குச் சேவை செய்வதே 'சேவைப் பொருளாதாரம்' எனும் தாய்மைப் பொருளாதாரத்தை ஆதரித்தார். இதனை உருவாக்குவதை தமது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். காந்தியடிகளின் பரவல் முறைப் பொருளாதாரம் இந்தியாவுக்கு ஏற்றது என்று அறிவியல் கூறுகளால் விளக்கினார்.

**உணவுநல அக்கறையாளராக**

'உணவுக்கான பயிர் விளையும் இடங்களில் பணப்பயிர்கள் விளையுதல் கூடாது'' என்றவர் ஜே.சி.குமரப்பா. ஆலைகளில் இருந்து வெளிவரும் பட்டை தீட்டிய அரசியை உண்பது மக்களின் உடல்நலத்துக்கு கேடு என்றார்.தீட்டாத அரிசியும் சிறுதானியங்களும் தான் மக்களின் நலனுக்கு நன்மை தரும் என்றார்.மக்களிடம் நீரழிவு நோய் உண்டு பண்ண தீட்டிய அரிசி காரணம் என்றதுடன் வைட்டமின்,தாதுப்பொருட்கள் குறைபாட்டைக் களையும் உணவை உண்ணவும் ஆலோசனை வழங்கினார்.

கரும்பு ஆலைகளின் உற்பத்தியில் தயாராகும் வெள்ளைச் சர்க்கரையை எதிர்த்தார். சர்க்கரை ஆலைகளுக்குப் பதிலாக பனைமரங்களின் வளர்ப்பினை ஊக்குவித்தார். கிராமப்புறங்களில் இயல்பாக வளரும் பனைமரங்களில் இருந்து பெறப்படும் பதநீர், கருப்பட்டி போன்றன மக்களின் உடல்நலனுக்கு அமிர்தம் போன்றன என்று வாதம் செய்தவர். ஆதலால்,உபயோகமற்று கிடக்கும் நிலங்களில் பெருமளவு பனைமரங்கள் வளர்க்க மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆதலால் ஜே.சி.குமரப்பா 'பசுமைப் பொருளாதாரச் சிந்தனையின் சிற்பி' என்று போற்றப்பட்டார்.

எரிசாராயத்தை ஒழிக்க வேண்டும் என்றார். பனைமரத்தொழில் மூலம் ஏழைத் தொழிலாளி வாழ்வினை உயர்த்த எண்ணினார். இயற்கையோடு இணைந்து நடக்கும் தொழிலே நீண்ட நாள் நீடிக்கும் என்றவர் ஜே.சி.குமரப்பா.

இயற்கை உணவு ஆர்வலராக கிராம வேளாண்மைக்கு முக்கியத்துவம் தந்தவர். சிறுதானியங்கள், கால்நடைகளின் தீவனங்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் போன்றவைகள் தான் கிராம மக்களின் வாழ்வாதாரத்துக்கு மூலகாரணம். அதனை ஊக்குவிக்க வேண்டும். அதனைத் தவிர்த்து வணிகத் தேவைக்கான கரும்பு, வாழை, பருத்தி, புகையிலை ஆகியவற்றை பயிரிடுதல் கூடாது என்றார்.

**தொகுப்புரை**

"வாழ்க நீ! எம்மான்,இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மாஹாத்மா நீ வாழ்க! வாழ்க!

என்ற மகாகவி பாரதியின் வாக்கிற்கிணங்க இந்திய தேசத்தின் நலனுக்காகப் பாடுபட்ட காந்தியடிகளும் அவரின் அறவழியில் நற்பணிகள் செய்த ஜே.சி.குமரப்பாவும் போற்றுதலுக்கு உரியவர்கள். கிராமிய வளர்ச்சி, கைத்தொழில்கள், இயற்கை ஆர்வம், பாமர மக்களுக்கும் பயன்தரும் பொருளாதாரம், பகிர்வு என்று காந்திய சிந்தனை வழியில் குமரப்பா சிந்தனை ஒத்திசைகின்றது. காந்தியடிகளின் மறைவுக்குப் பின் கிராமத்தொழில் வளர்ச்சிக்காகவும் இயற்கை வேளாண்மை மேம்பாட்டுக்காகவும் பல்வேறு பரிசோதனைகள் செய்தவர் ஜே.சி.குமரப்பா. வேளாண்மையும் மனித உடல்நலமும் இன்றைக்கு சீர்கேடு அடைந்துள்ளது. இதனை தடுக்க அன்றே அறிவுரை பகன்றவர் ஜே.சி.குமரப்பா.

**சான்றெண் விளக்கம்**

1. பி.ஜானகி, சுற்றுச்சூழல் கல்வி, ப. 9.